அசல்

10.3.1934 நீ. கந்தசாமி

அசல்-1

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

(காப்புப் பெற்றது)

கருந்திட்டைக்குடி, P.O.

10. 3. 1934.

தமிழ்ப் பெரியாரவர்களுக்கு. வணக்கம், தாங்கள் அன்போடு அனுப்பிய புத்தகங்களும் கடிதமும் கிடைத்தன. தாங்கள் இங்கு எப்பொழுது வர எண்ணியுள்ளீர்களென்பதை வருகிற தேதி, வாரம், காலம் முதலியவற்றின் விவரத்தோடு தெரிவித்தருள வேண்டுகின்றேன். இங்கு தாங்கள் தங்குவதற்கான வசதிகள் யாவும் செய்துள்ளோம். உணவுவகையால் ஏதேனும் பத்தியமிருப்பின் தெரிவிக்க வேண்டுகின்றேன். தங்களுக்கு ஆகவேண்டிய சௌகரியங்களையும் தெரிவிக்கவும் வேண்டுகிறேன். ஆண்டுவிழாவிற்கான ஏற்பாடுகள் யாவும் நன்கு நடைபெற்றுவருகின்றன. தங்கள் திருமுகம் நோக்கியிருக்கும்

அடியனாக

நீ. கந்தசாமி

அமைச்சன்

திரு. மஹாமஹோபாத்யாய டா. உ. வே. சா. அவர்கள்

அசல்

10.3.1934 நீ. கந்தசாமி.

அசல்-1

P. 285

தா.க. VOL 'K'

32

4/